1990 சனவரி 22]

சமுத்திரம் ஏரியில் சாத்தனூர் அணையின் நீரைத் தேக்கி நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டம்.

* 970—திரு. ஏ. ஜி. சம்பத் :—மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் திருவண்ணாமலை தாலூகா சமுத்திரம் ஏரியில் சாத்தனூர் அணையின் நீரைத் தேக்கி நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : (அ) மற்றும் (ஆ), மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலே இருக்கிற நீரை திருவண்ணாமலை பக்கத்திலே யிருக்கிற சமுத்திர ஏரிக்கு கொண்டு வந்து அதை நந்தன் கால்வாயோடு இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை பொது மக்களிடமிருந்து அரசுக்கு வந்திருக்கிறது. எனவே அந்தத் திட்டம் அரசின் கருத்தில் இருக்கிறது. இன்னும் எந்த செயல் வடிவமும் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப் படுகிறது.

கொள்ளிடத்தில் இருந்து கிடைக்கும் ஊற்று நீர், உபரி நீரை பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம்.

* 3311—டாக்டர் மா. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சீர்காழியில் வடரங்கத்தில் இருக்கும் கொள்ளிடத் தில் இருந்து கிடைக்கும் ஊற்று நீர், உபரி நீரை மீண்டும் இறைத்து பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

டாக்டர் மா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கடந்த டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசில் செயல்பட்ட ஒரு திட்டமாகும். இந்தத் திட்டம் சீர்காழி போன்ற கடைமடைப் பகுதியில் மூன்றாவது போகமாக குள்ளக் கார் என்ற சாகுபடி நடைபெறும். அப்போது தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால் வடரங்கத்தில் இருந்து கிடைக்கின்ற உபரி நீர், ஊற்றுநீரை ராட்சச என்ஜின் வைத்து இறைத்து அந்தப் பகுதி மக்கள் பாசனத்துக்குப் பயன்படுத்தினார்கள். டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கிய அந்தத் திட்டத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு இப்படி ஒரு திட்டத்தை செயல்படுத்தலாமா என்று அரசு யோசித்தது. அதற்கு செலவு அன்றைய மதிப்பீட்டின்படி கிட்டத்தட்ட ரூ. 70 இலட்சம் என்று கணக்கிடப்பட்டது. ஆனால் அரசுக்கு வருகிற வருவாய்க்கும் இந்தச் செலவுக்கும் பெருத்த வித்தியாசம் இருப்பதால் அது சரிபட்டு வராது என்று அரசு அப்போது கைவிட்டு விட்டது. மேலும் காவிரி ஆற்றில் கடந்த 10 ஆண்டுகளாக பாசனத்துக்குத் தண்ணீர் போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை. காவிரி டெல்டா பகுதிகளுக்கு ஜூன் மாதத்திற்கு பதிலாக ஆகஸ்ட் மாதம்தான் தண்ணீர் விடப்படுகின்ற நிலைமை உருவாகி இருக்கிறது. எனவே கொள்ளிடத்தில் உபரி நீரை எதிர்பார்க்க இயலாது. இருப்பினும் 1975 ஆம் ஆண்டு, 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தண்ணீர் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. அதோடு இரண்டு அடி விட்டமுள்ள குழாய் இரண்டு வரிசைகளாகப் பதிக்கப் பட்டிருக்கின்றன. கோடை கால பற்றாக்குறையின்போது ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் இறைத்திடுவதற்கு இந்தத் திட்டம் பயன்படும் என்று அரசு கருதியது.

டாக்டர் மா. பன்னீர்செல்வம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாணியாறு மற்றும் ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டங்கள்

*5984—திரு. வ. முல்லைவேந்தன் ; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள வாணியாறு மற்றும் ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டங்களுக்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?